செய்தி வெளியீடு எண்: 09-2018 நாள்: 05.02.2018

# விழுப்புரம் மாவட்டம் கால்நடை பராமரிப்புத்துறை சார்பாக 09.02.2018 முதல் 22.02.2018 வரை கோழிகளுக்கான வெள்ளைக்கழிச்சல் தடுப்பூசி முகாம் நடத்தப்பட உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

கோழிவளர்ப்போருக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தும் ராணிகட் எனப்படும் வெள்ளைக்கழிச்சல் நோயை கட்டுப்படுத்தி அதன்மூலம் கோழிவளர்ப்போருக்கு ஏற்படும் பொருளாதார இழப்பை தடுக்க தமிழக அரசு தொடர் நடவடிக்கை எடுத்துவருகிறது. அதன்படி, ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தில் கோழிக்கழிச்சல் இருவார தடுப்பூசி முகாம்கள் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் நடத்தப்படுகின்றன. அதுபோலவே இவ்வாண்டும் எதிர்வரும் 09.02.2018 (வெள்ளிக்கிழமை) முதல் 22.02.2018 (வியாழக்கிழமை) வரை கால்நடை பராமரிப்புத்துறை மூலம் கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

எனவே, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கோழிகளை வளர்க்கும் அனைத்து பொதுமக்களும் இந்த முகாம்களில் கலந்துகொண்டு தங்களது கோழிகளுக்கு தவறாமல் தடுப்பூசி போட்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதனால் கோழிகளில் வெள்ளைக்கழிச்சல் நோயின் காரணமாக ஏற்படும் இறப்பினை தவிர்த்து, கோழி வளர்ப்பில் அதிக லாபம் பெறலாம்.

மேலும் இது தொடர்பான விபரங்களுக்கு அருகில் உள்ள கால்நடை நிலையங்களை அணுகி விபரம் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.